**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC–216 /2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | திலகவதி | Prosecution | PW2, LW2 |
| Husband Name | சுரேஷ் | Defence | |
| Village | மயிலாடுதுறை | Taluk | மயிலாடுதுறை |
| Calling | | Age | 35/2025 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha, Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**20.05.2025.** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தர்மதானபுரம் கிராமத்தில் உதவியாளராக 2013ம் வருடம் முதல் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 16.03.2020ம் தேதியன்று மாலை நான் அலுவலகத்தில் இருந்தபோது, இந்த வழக்கு சம்பவம் சம்பந்தப்பட்ட தகவல் கிடைத்து கிராம நிர்வாக அலுவலரும் மற்றும் முன்னாள் கிராம உதவியாளர் துரைராஜ் என்பவரும் சம்பவ இடத்திற்கு சென்றனர். நான் அவர்களோடு நேரடியாக அந்த இடத்திற்கு செல்லவில்லை. சம்பவ இடத்திற்கு சென்று விட்டு வந்து மறுநாள் அ.சா1 சொல்ல தான் நான் சம்பவம் பற்றி தெரிந்து கொண்டேன். நேரடியாக எனக்கு அது பற்றி தெரியாது. போலீசார் என்னை நேரில் விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து தொலைபேசி மூலமாக என்னை தொடர்பு கொண்டு எனது பெயரையும் எனது கணவர் பெயரையும் கேட்டு தெரிந்து கொண்டார்கள். நடந்தது இதுதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கு சம்பவத்தை பற்றி, ஆஜர் எதிரி அ.சா.1 ஐ திட்டியது பற்றியோ அல்லது பணி செய்யவிடாமல் தடுத்தது பற்றியோ எனக்கு நேரடியாக எதுவும்

தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை நேரில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

## Case No.CC-216/2021

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அருண் | Prosecution | PW1, LW1 |
| Fathers Name | கந்தசாமி | Defence | |
| Village | நாகப்பட்டினம் | Taluk | கீழ் வேளூர் |
| Calling | | Age | 44/2025 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha, Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**<u>20.05.2025. எதிரி ஆஜர்</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம் பாலக்குறிச்சியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இதற்கு முன்பு நான் மயிலாடுதுறை தாலுகாவில் உள்ள தர்மதானபுரம் என்கிற கிராமத்தில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அப்போது, கடந்த 13.06.2020 தேதியன்று சுமார் மாலை 4.30மணிக்கு மேற்படி ஊரில் உள்ள மயானத்திலிருந்து சட்டத்திற்கு புறம்பாக மண் எடுப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் நான் அந்த இடத்திற்கு சென்றபோது, ஆஜர் எதிரி எழிலரசன் அங்கு JCB மற்றும் Tractor இயந்திரம் மூலமாக சுடுகாட்டில் இருந்து மண் எடுத்துக் கொண்டிருந்தார். நான் மேற்படி மண் எடுப்பதற்கு உரிய அரசாங்க அனுமதி உள்ளதா என அவரிடம் கேட்டதற்கு அவர் அந்த சமயம் அவர் கையில் உத்தரவு எதுவும் இல்லை என கூறினார். பிறகு, என்னை அவதூறாக திட்டி நான் அரசாங்கப் பணியை செய்வதை தடுத்தார். கடைசிவரை அவர் என்னிடம் அனுமதி உத்தரவு எதையும் காண்பிக்கவில்லை. பிறகு நான் சுமார் 7.00 மணி அளவில் வைத்தீஸ்வரன் கோவில் காவல் நிலையம் சென்று அவர் மீது புகார் கொடுத்து விட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் கொடுத்த புகாராகும். (மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் எவ்வளவு படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ ECE படித்துள்ளேன். அ.சா.ஆ.1 ஆன புகாரை நான் தான் என் கைப்பட எழுதினேனா என்றால் ஆமாம்.

மேற்படி புகாரில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி புகாரில் எதிரியின் பெயர் மாற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் புகாரில் 'எழில் ராஜன்' என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆஜர் எதிரி தான் குற்றவாளி. மேற்படி புகாரில் எழில் ராஜன் என்று நான் தான் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவ நாளன்று நான் பணியில் இருந்ததை காட்டும் விதமாக என்னுடைய வருகை பதிவேட்டை இவ் வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆகவே அன்றைய தினம் நான் பணியில் இருந்தேனா இல்லையா என்பது பற்றி போலீசாருக்கு தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல அன்றைய தினம் என்னுடைய கிராம உதவியாளரும் பணியில் இருந்தார் என்பதற்கு சான்றாக வருகை பதிவேடு எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கமாக என்னுடைய பணி நேரம் என்ன என்றால் தினமும் காலை 10.00 மணிக்கு நான் எனது அலுவலகத்திற்கு சென்று விடுவேன். மேற்படி சம்பவ நாளன்று சம்பவ இடமான சுடுகாட்டில் குடிமராமத்து பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது என்றால் அது தவறு. குடிமராமத்து பணி ஒருபோதும் சுடுகாட்டில் நடக்காது. நான் எனது புகாரில் மயானம் அருகே அமைந்துள்ள குட்டையில் தான் எதிரி மண் எடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றாலும் மயானத்தில் எடுத்ததாக சொல்லவில்லை என்றாலும் அது தவறு. மயானத்தில் எடுத்ததாக தான் நான் சொல்லி உள்ளேன். குட்டை என்று சொல்லவில்லை. பொதுவாக ஒரு இடத்தில் இருந்து மண் எடுப்பதற்கு யார் அனுமதி கொடுப்பார்கள் என்றால் வருவாய் கோட்டாட்சியர் அனுமதி அளிப்பார். வட்டாட்சியர் அதற்கு பரிந்துரை செய்து உத்தரவிடுவார். ஊராட்சி ஒன்றிய அலுவலர் அதற்கு அனுமதி அளிப்பாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அனுமதியின்றி எதிரி மண் எடுத்ததாக சொல்லி இதற்கு முன்பு அவர் மீது ஏதேனும் காவல்துறையில் புகாரோ அல்லது வட்டாட்சியர் அவருக்கு எதிராக நடவடிக்கையோ எடுத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி உண்மையில் அத்தகைய செயல்கள் எதனிலும் ஈடுபடவில்லை என்றாலும் அவர் முறையாக உரிமம் பெற்று மண் எடுத்ததால் தான் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

2. சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திற்கு என்னோடு வேறு யார் வந்தார்கள் என்றால் நானும் அப்போது ஓய்வு பெற்று விட்ட எனது முன்னாள் கிராம உதவியாளர் திரு. துரைராஜ் என்பவர் வந்திருந்தார். ஓய்வு பெற்ற ஒரு நபரை எதற்காக நான் அழைத்துச் சென்றேன் என்றால் அது எந்த இடம் என்பதற்காகவும் மற்றும் ஒரு உதவிக்காகவும் அழைத்துச் சென்றேன். நான் தனியாக செல்ல வேண்டாம் என்று கருதி ஒரு துணைக்காக அவரை அழைத்துச் சென்றேன். எனக்கு உண்மையில் மயானம் எங்கு இருக்கிறது என்று தெரியாது என்றாலும் அதற்காக தான் நான் அவரை அழைத்துச் சென்றேன் என்றாலும் சரியல்ல. சம்பவ சமயத்தில் சம்பவ

இடத்தில் வேறு நபர்கள் இருந்தார்களா என்றால் நிறைய நபர்கள் இருந்தார்கள் ஆனால் அவர்கள் யார் யார் என்று நான் விசாரிக்கவில்லை. முரளி என்கிற ஒரு நபர் இருந்தார் அவர் தற்போது உயிருடன் இல்லை. அவ்வாறு அங்கு நின்றிருந்த எந்த ஒரு நபரையும் அரசு தரப்பில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட JCBன் பதிவெண்ணை குறிப்பிட்டு நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் அத்தகைய வாகனம் எதுவும் இல்லை என்றாலும் அதனால் தான் நான் அந்த வாகனத்தின் என்னை குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. பொதுவாக மணல் அள்ளும் வழக்குகளில் தாசில்தார் தான் புகார் கொடுப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையில் எதிரிக்கு மணல் அல்ல உரிமம் இருந்ததால்தான் நான் மேற்படி விவகாரத்தை தாசில்தாரிடம் எடுத்துச் செல்லவில்லை என்றால் அது தவறு. அது பற்றி நான் தாசில்தாரிடம் கூறினேன். அவர் அந்த சமயம் ஒரு கூட்டத்திற்கு சென்று விட்டார். மேற்படி சம்பவம் பற்றி நான் எழுத்துப்பூர்வமாக தாசில்தாரிடம் தெரிவித்தேனா என்றால் அவரிடமும் மற்றும் கோட்டாட்சியரிடமும் எழுத்து பூர்வமாக தெரிவித்துள்ளேன். மேற்படி எழுத்துப் பூர்வ புகாரை நான் போலீஸாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்தது பொய் புகார் என்பதால்தான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது புகாரை தொடர்ந்து போலீசார் எதிரியிடமிருந்து ஏதேனும் வாகனங்களை கைப்பற்றினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையில் சட்டத்திற்கு புறம்பாக மண் அள்ளப்பட்டிருந்தால் போலீசார் வாகனத்தை கைப்பற்றி இருப்பார்கள் என்றாலும் அவ்வாறு செய்யாததில் இருந்தே சட்டத்திற்கு புறம்பாக எதுவும் நடைபெறவில்லை என்பது தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல. 15 நாள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ தேதி அன்று என்னுடைய அலுவலகத்திற்கு வந்து எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும் பணி செய்ய விடாமல் தடுக்கவில்லை என்றாலும் சரிதான். உண்மையில் சம்பவ நாளன்று எதிரி முறைப்படி அனுமதி பெற்று மண்ண அள்ளிக் கொண்டிருந்தார் என்றாலும் நான் தான் அவரிடம் வந்து 'நீ தாசில்தாருக்கு மாத்திரம் கையூட்டு கொடுத்துவிட்டு, மண் அள்ளுகிறாய், ஆனால் எனக்கு உரிய கையூட்டு கொடுக்க தவறிவிட்டாய்' எனக்கூறி அவரிடம் சண்டை பிடித்தேன் என்றால் சரியல்ல. அந்த காரணத்தினால் தான் எதிரிக்கு எதிராக இந்த பொய் புகாரையும் நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி ஒரு சமூக ஆர்வலர் என்றால் சரியல்ல. நான் எனது அலுவலகத்திற்கு சரிவர வராதது சம்பந்தமாக அவர் என்னை பலமுறை தட்டி கேட்டுள்ளார் என்றாலும் அதன் காரணமாக அவர் மீது விரோதம் கொண்டு இந்த பொய் புகாரை நான் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னோடு அந்த ஓய்வு

பெற்ற கிராம உதவியாளரையும் அவருக்கு கையூட்டு வாங்கி கொடுப்பதற்காகத்தான் நான் அழைத்துச் சென்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய இந்த பொய் புகார் மற்றும் பொய் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது**

**மறுவிசாரணை இல்லை.**